கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.144/2016** **DW:2** **11.11.2025**

2025ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய ராணி என்பவரின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராணி | வயது | 60 |
| த/க. பெயர் | பன்னீர்செல்வம் | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | ராமநத்தம் |
| மாவட்டம் | கடலூர் | | |

<u>குறுக்கு விசாரணை</u>

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன். வாதி தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.4 ல் உள்ள வரைபடத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. இந்த வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். 21.02.1950 பி.வா.த.சா.ஆ.1 ன் படி பச்சையம்மாள் ராமசாமி அவர்களுக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 30.03.1971  பி.வா.த.சா.ஆ.2 ன் படி ராமசாமி வாதி சிவசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 28.04.1952  பி.வா.த.சா.ஆ.3 ன் படி பூவம்மாள் வடிவேல் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வடிவேல் ஒரே மகன் தான் வாதி சிவசாமி என்றால் சரிதான்.  நான் சாமிக்கண்ணிடம் இருந்து எந்த வருடம் கிரயம் பெற்றேன் என்றால் 1987. நான் எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் பெற்றேன் என்றால் எனக்கு தெரியாது. அந்த பத்திரம் எந்த தேதியில் பதிவாகியது மற்றும் எந்த தேதியில் எழுதப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த கிரயப்பத்திரத்தில் முத்திரை தாள் யார் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது, எனக்கு எழுதப்படிக்க தெரியாது. அந்த கிரயப்பத்திரத்தில் யார் பெயரில் பதிவு கட்டணம் செலுத்தப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. கிரயப்பத்திரம் எழுதும் காலத்தில் நான் வெளியூரில் இருந்தேனா என்றால் சாட்சி முதலில் வெளியூரில் இருந்தேன் என்று கூறிவிட்டு பின்பு வெளியில் இருந்து ஒரு நபர் சொன்னதின் அடிப்படையில் இந்த ஊரில்

தான் இருந்தேன் என்று சாட்சி மாற்றி பதில் கூறினார். சாமிகண்ணு எனக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தில் சாமிக்கண்ணுற்கு கிரய சொத்து எப்படி பாத்தியம் என்று பத்திரத்தில் எழுதவில்லை என்றால் சரிதான். இந்த பத்திரம் எழுதும்போது மூலப்பத்திரங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், அ பதிவேடு இல்லை என்றால் சரிதான். கிரயப்பத்திரத்தில் உள்ள நான்கெல்லைகள் சாமிக்கண்ணு சொன்னதின் அடிப்படையில் தான் எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் கிரயப்பத்திரம் வாங்கும்போது வழக்கு சொத்தை அளந்து பார்த்து வாங்கினேனா என்றால் என் அப்பா தான் அளந்து பார்த்திருப்பார். வழக்கு சொத்தை அளப்பதற்கு F line challan பணம் கட்டி அதன் பின்பு தாலுக் அலுவலகத்திலிருந்து நில அளவையர் அளந்து பார்த்து அதற்கு ஒரு சான்றிதழ் வழங்குவார் என்ற முறை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொத்தை வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் பார்த்து வாங்கினேனா என்றால் பார்த்து தான் வாங்கினேன். அந்த வில்லங்க சான்றிதழை நான் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அந்த வில்லங்க பத்திரத்தில் பி.வா.த.சா.ஆ.1 முதல் 3 வரை உள்ள ஆவணங்கள் அதில் காண்பிக்கப்பட்டதா என்றால் காண்பிக்கப்பட்டது. பி.வா.த.சா.ஆ. 1 முதல் 3 வரை உள்ள ஆவணங்களின் நகலை பெற்று அதை நான் படித்து பார்த்த பின்பு தான் பி.வா.த.சா.ஆ.4 ல் உள்ள கிரயப்பத்திரம் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் சாமிகண்ணிடம் இருந்து கிரயம் பெற்ற சொத்தை அனுபவித்து வருகிறேனா என்றால் அனுபவித்து வந்து விற்றுவிட்டேன்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI
Digitally signed by N SHALINI
Date: 2025.11.11 16:15:52 +0530

Additional District Munsif,
Tittagudi.